**உதவி அமர்வு நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை: திருமதி. S. மும்தாஜ், B.Sc.,B.L.,**
**உதவி அமர்வு நீதிபதி, சீர்காழி**

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 9–ஆம் நாள் வியாழக்கிழமை

**அமர்வு வழக்கு எண்.29/2024**

**CNR No. TNMY06-000858-2024**

(சீர்காழி, குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் அவர்களால் முதல்நிலை பதிவேடு வழக்கு எண். 6/2024 ன்படி மேல் விசாரணைக்காக அனுப்பிவைக்கப்பட்டது)

**திருவெண்காடு காவல் நிலைய குற்ற எண்.219/2023**

| வ.எண் | தலைப்பு | | விவரங்கள் |
|---|---|---|---|
| 1 | காவல் நிலையம் மற்றும் குற்ற எண். | : | திருவெண்காடு காவல் நிலைய குற்ற எண்.219/2023 |
| 2 to 7 | எதிரிகளின் விபரங்கள் (பெயர், தந்தை பெயர், தொழில், இருப்பிடம் & முகவரி | : | இலக்கியராஜ், வயது 36/2023,<br>த/பெ. கோவிந்தராஜ்,<br>மேலத்தெரு,<br>நாங்கூர், சீர்காழி. |
| 8 | குற்றம் நடைபெற்ற நாள் | : | 25.11.2023 |
| 9 | புகார் கொடுத்த நாள் | : | 27.11.2023 |
| 10 | எதிரியை கைது செய்த நாள் | : | 27.11.2023 |
| 11 | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | 15.03.2024 |
| 12 | விசாரணை நீதிமன்றம் முதலேற்பு செய்த நாள் | : | 06.03.2025 |
| 13 | சாட்சி விசாரணை தொடங்கிய நாள் | : | 16.09.2025 |
| 14 | சாட்சி விசாரணை நிறைவுற்ற நாள் | : | 02.04.2026 |
| 15 | தீர்ப்பு வழங்கிய தேதி | : | 09.04.2026 |
| 16 | தீர்ப்பின் நகல் வழங்கிய தேதி | : | 09.04.2026 |
| 17 | காலதாமத்திற்கான காரணம் | : | -- |
| காவல் துறையினரால் குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றசாட்டுகள் | | : | U/S. 294(பி), 386, 307, 506(2) IPC மற்றும் r/w Sec.25(1) (b), 27(2) Arms Act |

MUMTAJ Digitally signed by MUMTAJ
Date: 2026.04.09 17:23:22 +0530

| | | |
|---|---|---|
| எதிரிகளின் பதிலுரை | : | குற்றவாளி இல்லை |
| நீதிபதியின் தீர்மானம் மற்றும் தீர்ப்புரை பற்றிய விபரம் | : | **முடிவாக,** எதிரி இத.ச. பிரிவுகள் 294(b), 386, 506(2), 307 r/w 25(1) (b), 27(2) Arms Act ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 235(1)–ன் கீழ் இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>இவ்வழக்கில் **S.C.P. No.1** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சா.பொ.1 Sickle சுமார் 17 செ.மீ. நீளமுள்ள அதில் 5 செ.மீ. வெள்ளை நிற ஒயர் சுற்றப்பட்ட கைப்பிடியும், சுமார் 12 செ.மீ. நீளமுள்ள வெட்டு பகுதியும் கொண்ட மொத்தம் 17 செ.மீ. நீளமுள்ள இரும்பு அரிவாள்.–1 மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழக்க உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு மயிலாடுதுறை முதன்மை உதவி அமர்வு நீதிமன்றத்தால் அமர்வு வழக்கு எண்.29/2024 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு மாண்புமிகு நாகப்பட்டினம் முதன்மை அமர்வு நீதிமன்றத்தின் 08.11.2022ம் தேதியிட்ட உத்தரவு எண். A.No.332/22–ன்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, இவ்வழக்கு 02.04.2026 அன்று என் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்த போது அரசுக்காக கூடுதல் அரசு தரப்பு வழக்கறிஞர் திரு. எஸ்.ஜே. ஜெயந்தி அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. எம். ராஜேஷ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

## <u>தீர்ப்புரை</u>

1. அரசுத்தரப்பு வழக்கானது இவ்வழக்கின் வாதியான முத்துக்கிருஷ்ணன் என்பவர் மொத்தமாக தேங்காய் வாங்கி, சில்லரை வியாபாரம் செய்யும் தொழில் செய்து வருபவர், மேற்படி வாதி திருவெண்காடு காவல் நிலைய சரகம் நாங்கூர் தெற்கு வீதியில் உள்ள பட்டு என்பவரது டீ கடை அருகில், வாதி அவருடன் நாங்கூரில்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.09 17:23:27 +0530

தேங்காய் பறிக்க அழைத்து வந்தவர்களுக்கு டீ வாங்கி கொண்டு செல்வதற்காக 25.11.2023 ஆம் தேதி 13.00 மணிக்கு சம்பவயிடம் சென்றபோது அங்கு நின்றிருந்த இவ்வழக்கின் எதிரி இலக்கியராஜ் வாதியை பார்த்து குச்சிகாரி மவனே, தேவுடியா மவனே என்னையே முறைத்து பார்க்கிறாயா நீ, என்று காமகுரோதமான வார்த்தைகளால் திட்டியும், எதிரி கையில் வைத்திருந்த அருவாளை வாதியின் கழுத்தில் வைத்து, அவரது சட்டைப் பையில் வைத்திருந்த ரூ.200/-யை எடுத்துக்கொண்டு வாதியை மிரட்டி, என்னை கண்டாலே அலறனும், நீ முறைக்கிற என்று கூறி வாதியை இத்தோடு ஒழிந்து போடா என்று கொலை செய்யும் நோக்கத்தில் அருவாளால் ஓங்கி வெட்டவே, வாதி விலகி விட்டதாகவும், இல்லையென்றால் அருவாள் வாதியின் கழுத்தை வெட்டியிருக்கும் என்றும், அதன் பின் எதிரி வாதியை இங்கிருந்து ஓடிவிடு, இல்லையென்றால் நீ இந்த பக்கம் வரும்போது அருவாளால் உன்னை வெட்டி கொலை செய்துவிடுவேன் என்று கொலைமிரட்டல் விடுத்ததால் எதிரியின் மீது இதச பிரிவுகள் 294(b), 386, 506(ii), 307 மற்றும் r/w. Sec.25(1) (b), 27 (2) Arms Act ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கூறி எதிரி மீது திருவெண்காடு காவல் நிலைய ஆய்வாளர் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. சீர்காழி, குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் மேற்படி வழக்கினை தமது கோப்பில் மு.ப.வ.எண்.6/2024 ஆக எடுத்துக்கொண்டு வழக்கில் எதிரி முன்னிலையானவுடன் வழக்காவணங்களின் நகல்களை கு.வி.மு.ச.பிரிவு 209(அ)ன் கீழ் வழங்கி பரிசீலனை செய்கையில் எதிரி மீதான குற்றங்கள் அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்க குற்றங்களாக இருந்ததால் இவ்வழக்கினை கு.வி.மு.ச. பிரிவு 209(அ)ன்படி மயிலாடுதுறை முதன்மை உதவி அமர்வு நீதிமன்றத்திற்கு மேல் விசாரணைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கு மயிலாடுதுறை முதன்மை உதவி அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு மாண்புமிகு நாகப்பட்டினம் முதன்மை அமர்வு நீதிமன்றத்தின் 08.11.2022ம் தேதியிட்ட உத்தரவு எண். A.No.332/22-ன்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

3. நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையானவுடன் எதிரி மீதான இ.த.ச.பிரிவுகள் 294(b), 386, 506(ii), 307 r/w. Sec.25(1) (b), 27 (2) Arms Act ன் கீழான குற்றச்சாட்டுக்கள் வனைந்து தமிழில் படித்து காண்பித்து விளக்கிக்கூறி

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.09 17:23:32 +0530

வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்தார். ஆகையால் வழக்கு சாட்சி விசாரணைக்காக உத்தரவிடப்பட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்களும், சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4. <u>**அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு**</u>

அரசு தரப்பு சாட்சியான அ.சா.1 முத்துக்கிருஷ்ணன் அவரது சாட்சியத்தில் அவர் தற்போது புத்தூரில் வசித்து வருவதாகவும், வலி வேலை செய்து வருவதாகவும், ஆஜர் எதிரியை தெரியாது என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையதல்ல என்றும், வழக்கு எப்போது எதற்காக கொடுத்தேன் என்று எனக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5. அரசு தரப்பு சாட்சியான அ.சா.2 தமிழ்வாணன் மற்றும் அ.சா.3 ராஜதுரை தங்களது சாட்சியத்தில் அவர்கள் தற்போது நாங்கூரில் வசித்து செய்து வருவதாகவும், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும், தங்களை போலிசார் விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

6. அரசு தரப்பு சாட்சியான அ.சா.4 சங்கர் தனது சாட்சியத்தில் தான் தற்போது நாங்கூரில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருவதாகவும், இலக்கியராஜ் என்பவரை தெரியும் என்றும், முத்துக்கிருஷ்ணனை தெரியாது என்றும், வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும், போலிசார் விசாரித்துக்கொண்டிருந்ததை பார்த்தேன் என்றும் என்ன வழக்கு எப்போது நடந்தது என்பது பற்றி தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சியான அ.சா.5 ராஜசேகர் தனது சாட்சியத்தில் தான் தற்போது நாங்கூரில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருவதாகவும், சத்தியராஜ் என்பவரை தெரியும் என்றும், தன்னுடன் வேலை பாக்கிறார் என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து தன்னுடையதல்ல என்றும் போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார். அரசு தரப்பு சாட்சியான அ.சா.6 சத்தியராஜ் தனது சாட்சியத்தில் தான் தற்போது நாங்கூரில் வசித்து

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.09 17:23:37 +0530

கொத்தனார் வேலை செய்து வருவதாகவும், ராஜசேகர் என்பவரை தெரியும் என்றும், தன்னுடன் வேலை பாக்கிறார் என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து தன்னுடையதல்ல என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

8. அரசு தரப்பு சாட்சியான அ.சா.7 கழனியப்பன் தனது சாட்சியத்தில் அவர் தற்போது திருவெண்காடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருவதாகவும், கடந்த 27.11.2023 ம் தேதிகாலை 9.00 மணிக்கு திருவெண்காடு காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் கீர்த்திவாசன் என்பவர் நிலைய பொருப்பில் இருந்த போது சீர்காழி தாலுக்கா வைத்திஸ்வரன் கோயில் கீழத் தெருவை சேர்ந்த வெங்கடேசன் மகன் முத்துக்கிருஷ்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய மனு எண். 613/2023 பதிவு செய்து விசாரணை செய்து நிலைய குற்ற எண். 219/2023 U/s. 294(b), 386, 506 (ii) 307 IPC r/w 25(1) (b), 27(2) Arms Act ன் கீழ் வழக்கு பதிவு செய்ததை ஆய்வாளர் அண்ணாதுரை விசாரணைக்கு எடுத்துக்கொண்டதாகவும், புகார் அ.சா.ஆ. 1 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆகவும், ஆய்வாளர் அண்ணாதுரை என்பவர் இவ்வழக்கினை புலன் விசாரணை எடுததுக் கொண்டு அன்றைய தினமே 9.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சத்தியராஜ், ராஜசேகர் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அது அ.சா.ஆ. 3 மற்றும் 4 ஆகவும், சாட்சிகள் முத்துக்கிருஷ்ணன், சங்கர், தமிழ்வாணன், ராஜதுரை, கனகராஜ், ராஜசேகர், சத்தியராஜ், பாலமுருகன், ராமச்சந்திரன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், வழக்கின் எதிரி இலக்கியராஜ் என்பவரை 27.11.2023 ம் தேதி 12.00 மணிக்கு மங்கைமடம் கடைதெரு அருகே குற்ற காரணம் கூறி கைது செய்து கைது சாட்சிகள் பாலமுருகன், ராமச்சந்திரன் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரியை விசாரிக்க தானக முன் வந்து கொடுத்த ஒப்பபுதல் வாக்குமூல்தை பதிவு செய்தும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி ஆஜர் செய்த 17inch நீளமுள்ள 5 inch வெள்ளை நிற ஒயர் சுற்றபட்ட கைப்பிடியும், சுமார் 12 inch நீளமுள்ள வெட்டும் பகுதியும் கொண்ட மொத்தம் 17 inch நீளமுள்ள இரும்பு அரிவாள் ஒன்று அவர் வீடடிற்கு பின்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.09 17:23:43 +0530

புறம் மறைத்து வைத்ததை எடுத்து ஆஜர் செய்ததை சாட்சிகள் முன்னிலையில் கைப்பறுதல் மகசர் மூலம் கைப்பற்றி உள்ளதாகவும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்டட பகுதி மற்றும் கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ. 5 மற்றும் 6 ஆகவும், படிவம் 95 அ.சா.ஆ. 7 ஆகவும், எதிரியை நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி உள்ளதாகவும், வழக்கு பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் கீர்த்திவாசன் என்பவரை விசாரணை செய்து இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து 19.12.2023 ம் தேதி U/s. 294(b), 386, 506 (ii) 307 IPC r/w 25(1) (b), 27(2) Arms Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

9. அரசு தரப்பு சாட்சியங்களின் சாட்சியத்திலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் அம்சங்களை தொகுத்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)—ன்படி கேள்வி எழுப்ப எதிரி அவற்றை பொய் சாட்சிகள் என மறுத்தும், வழக்கு குறித்து பொய் வழக்கு என தெரிவித்தும் தமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லையென தெரிவித்தனர்.

10. **<u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை</u>**

எதிரி மீதான இ.த.ச.பிரிவுகள் 294(b), 386, 506 (ii) 307 IPC r/w 25(1) (b), 27(2) Arms Act ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>11. தீர்வு:—</u>**

அரசு தரப்பு வழக்கானது இவ்வழக்கின் வாதியான முத்துக்கிருஷ்ணன் என்பவர் மொத்தமாக தேங்காய் வாங்கி, சில்லரை வியாபாரம் செய்யும் தொழில் செய்து வருவதாகவும், மேற்படி வாதி திருவெண்காடு காவல் நிலைய சரகம் நாங்கூர் தெற்கு வீதியில் உள்ள பட்டு என்பவரது டீ கடை அருகில், வாதி அவருடன் நாங்கூரில் தேங்காய் பறிக்க அழைத்து வந்தவர்களுக்கு டீ வாங்கி கொண்டு செல்வதற்காக 25.11.2023 ஆம் தேதி 13.00 மணிக்கு சம்பவயிடம் சென்றபோது அங்கு நின்றிருந்த இவ்வழக்கின் எதிரி இலக்கியராஜ் வாதியை காமகுரோதமான வார்த்தைகளால் திட்டியும், எதிரி கையில் வைத்திருந்த அருவாளை வாதியின் கழுத்தில் வைத்து, அவரது சட்டைப் பையில் வைத்திருந்த ரூ.200/—யை எடுத்துக்கொண்டு வாதியை மிரட்டி, என்னை கண்டாலே அலறனும், நீ முறைக்கிற என்று கூறி வாதியை

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.09 17:23:48 +0530

இத்தோடு ஒழிந்து போடா என்று கொலை செய்யும் நோக்கத்தில் அருவாளால் ஓங்கி வெட்டவே, வாதி விலகி விட்டதாகவும், இல்லையென்றால் அருவாள் வாதியின் கழுத்தை வெட்டியிருக்கும் என்றும், அதன் பின் எதிரி வாதியை இங்கிருந்து ஓடிவிடு, இல்லையென்றால் நீ இந்த பக்கம் வரும்போது அருவாளால் உன்னை வெட்டி கொலை செய்துவிடுவேன் என்று கொலைமிரட்டல் விடுத்ததாக எதிரியின் மீது இதச பிரிவுகள் 294(b), 386, 506(ii), 307 மற்றும் r/w. Sec.25(1) (b), 27 (2) Arms Act ன் கீழ் எதிரி மீது குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளன.

12. அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கும் பொருட்டு இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தம்முடைய நீதிமன்ற சாட்சியத்தில் தான் தற்போது புத்தூரில் வசித்து வருவதாகவும், ஆஜர் எதிரியை தெரியாது என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையதல்ல என்றும், வழக்கு எப்போது எதற்காக கொடுத்தேன் என்று தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் சான்று பொருள் அரிவாளை பற்றி தனக்கு தெரியாது என்றும் சாட்சியமளித்து பிறழ் சாட்சியாகியுள்ளார். வழக்கு குற்ற சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக அ.சா.2 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.2 தம்முடைய சாட்சியத்தில் தான் நாங்கூரில் வசித்து வருவதாகவும், பெட்டிக் கடை நடத்தி வருவதாகவும், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும், தன்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்து பிறழ்சாட்சியாகியுள்ளார். இவ்வழக்கு குற்றச்சம்பவத்தின் மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.3 தம்முடைய சாட்சியத்தில் தான் நாங்கூரில் வசித்து வருவதாகவும், தான் முன்னால் இராணுவ வீரர் என்றும், ஆஜர் எதிரியை தெரியும் என்றும், வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியமளித்து பிறழ்சாட்சியாகியுள்ளார். அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.4 தம்முடைய சாட்சியத்தில் தான் நாங்கூரில் வசித்து வருவதாகவும், கொத்தனார் வேலை செய்து வருவதாகவும், எதிரியை தெரியும் என்றும், புகார்தாரரை தெரியாது என்றும், வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும், என்ன வழக்கு எப்போது நடந்தது என்பது பற்றி தனக்கு தெரியாது என்றும், தன்னை போலிசார்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.09 17:23:53 +0530

விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்து பிறழ்சாட்சியாகியுள்ளார்.

13. இவ்வழக்கில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபட சாட்சிகளாக அ.சா.5 மற்றும் அ.சா.6 விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.5 மற்றும் அ.சா.6 தங்களுடைய சாட்சியத்தில் தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள சாட்சி கையெழுத்து தன்னுடையதல்ல என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியமளித்து பிறழ்சாட்சியாகியுள்ளனர். இவ்வழக்கில் கூடுதல் சட்சியாக விசாரிக்கப்பட்ட திருவெண்காடு காவல் நிலைய காவல் ஆய்வாளர் அ.சா.7 தம்முடைய சாட்சியத்தில் இவ்வழக்கின் புகார்தாரரிடமிருந்து புகார் அ.சா.ஆ.1 யை பெற்று முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 பதிவு செய்தது குறித்தும், இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் அ.சா.ஆ.3 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 தயார் செய்தது குறித்தும், எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று, அதன் அடிப்படையில் சான்று பொருளை கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.6–ல் கைப்பற்றியது குறித்தும் கைப்பற்றப்பட்ட சான்று பொருளை படிவம் 95 அ.சா.ஆ.7 மூலம் நீதிமன்றம் அனுப்பி வைத்தது குறித்தும், இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.7 தம்முடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் இவ்வழக்கை தான் நேரடியாக விசாரணை செய்யவில்லை என்றும், தன் சக அதிகாரி தயார் செய்த ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும் கூறியுள்ளார்.

14. இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை ஒருசேர பரிசீலனை செய்கையில் புகார்தாரரான அ.சா.1 அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியாகியுள்ளார். அ.சா.1 தம்முடைய சாட்சியத்தில் புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையதல்ல என்று மறுத்து சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கின் குற்றச்சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அ.சா.2 முதல் அ.சா.4 சாட்சிகளின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில் அமையவில்லை. பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் சாட்சிகளான அ.சா.5 மற்றும் அ.சா.6 அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியாகியுள்ளனர். இவ்வழக்கில் கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.7 ன் சாட்சியம் இவ்வழக்கின்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.09 17:23:58 +0530

புலன் விசாரணை குறித்து மட்டுமே அமைந்துள்ளது. எனவே இவ்வழக்கின் புகார்தாரரின் சாட்சியம் அரசு தரப்புக்கு ஆதரவாக அமையாமல் அ.சா.1 பிறழ்சாட்சியாகியுள்ளார் என்பதை பரிசீலனை செய்தும், சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியமும் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில் அமையவில்லை என்பதாலும், அ.சா.7 ன் சாட்சியத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு எதிரியை இவ்வழக்கின் குற்ற சம்பவத்தோடு தொடர்பு படுத்த இயலாது என்று தீர்மானிக்கப்படுகிறது. மேற்கண்ட பரிசீலனையிலிருந்து ஆஜர் எதிரி மீதான இத.ச. பிரிவுகள் 294(b), 386, 506(2), 307 r/w 25(1) (b), 27(2) Arms Act ன் கீழுான குற்றச்சாட்டுக்கள் தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூப்பிக்க தவறியுள்ளதாக தீர்மானித்து ஆஜர் எதிரியை இவ்வழக்கில் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து, ஆஜர் எதிரியை இக்குற்ற வழக்கிலிருந்து விடுதலை செய்வதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இவ்வழக்கின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

15. **முடிவாக,** எதிரி இத.ச. பிரிவுகள் 294(b), 386, 506(2), 307 r/w 25(1) (b), 27(2) Arms Act ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 235(1)–ன் கீழ் இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் **S.C.P. No.1** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சா.பொ.1 Sickle சுமார் 17 செ.மீ. நீளமுள்ள அதில் 5 செ.மீ. வெள்ளை நிற ஒயர் சுற்றப்பட்ட கைப்பிடியும், சுமார் 12 செ.மீ. நீளமுள்ள வெட்டு பகுதியும் கொண்ட மொத்தம் 17 செ.மீ. நீளமுள்ள இரும்பு அரிவாள்.–1 மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுத்து கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9 ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.04.09 17:24:03 +0530

உதவி அமர்வு நீதிபதி,
சீர்காழி.

**<u>சாட்சிகள் சான்றாவணங்கள் பட்டியல்</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. முத்துக்கிருஷ்ணனை |
| அ.சா.2 | திரு. தமிழ்வாணன் |
| அ.சா.3 | திரு. ராஜதுரை |
| அ.சா.4 | திரு. சங்கர் |
| அ.சா.5 | திரு. ராஜசேகர் |
| அ.சா.6 | திரு. சத்தியராஜ் |
| அ.சா.7 | திரு. கழனியப்பன் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் |
| அ.சா.ஆ.2 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.4 | வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 1 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.6 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.7 | படிவம் 95 |

**<u>அரசு தரப்பு சான்று பொருட்கள்:</u>**

| | |
|---|---|
| சா.பொ.1 | Sickle சுமார் 17 செ.மீ. நீளமுள்ள அதில் 5 செ.மீ. வெள்ளை நிற ஒயர் சுற்றப்பட்ட கைப்பிடியும், சுமார் 12 செ.மீ. நீளமுள்ள வெட்டு பகுதியும் கொண்ட மொத்தம் 17 செ.மீ. நீளமுள்ள இரும்பு அரிவாள்.–1 |

**<u>எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** –இல்லை–

MUMTAJ
Digitally signed by MUMTAJ
Date: 2026.04.09 17:24:09 +0530

உதவி அமர்வு நீதிபதி, சீர்காழி.

நேரிய /வரைவு தீர்ப்புரை
அமர்வு வழக்கு எண்.29/2024
நாள் . 09.04.2026